# இழப்புறுதிக் கடிதம்

VP – செயற்படுத்தல்கள்
HNB செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
4வது மாடி, 53, தர்மபால மாவத்தை
கொழும்பு 03
இலங்கை

அன்புடையீர்,

**மின்னஞ்சல் மற்றும் /அல்லது தொலைநகல் மூலமான அறிவுறுத்தல்கள் தொடர்பானது**

01. (இங்குள்ள அட்டவணையில் "A" இன் கீழ் பெயரிடப்பட்டுள்ள) வாடிக்கையாளரான(களான) நான்/நாங்கள் HNB செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (HNB Securities Limited - "HSL") உடன் முதலீட்டு வங்கி உறவைக் கொண்டுள்ளோம். இந்த உறவின் போது, நான்/நாங்கள் அவ்வப்போது, இங்குள்ள அட்டவணையில் "C" இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்க விரும்பலாம் என்பதுடன், HSL ஆனது ("மின்னஞ்சல்") மற்றும்.:.அல்லது தொலைநகல் பரிமாற்றம் ("தொலைநகல்") மூலம் HSL க்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவம் மற்றும் முறையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீடுகளுக்கு உட்பட்டு, மின்னஞ்சல் மூலம் எங்கள் அறிவுறுத்தல்களை வழங்கும் வசதியை எங்களுக்கு வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.

02. மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் ("மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள்") நான்/எங்களால் உருவாக்கப்படும் மின்னஞ்சல் முகவரி/இங்குள்ள அட்டவணையின் "D" இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ("மூல மின்னஞ்சல் முகவரி") இல் இருந்து இலக்கு மின்னஞ்சல் முகவரிக்கு – client@hnbsecurities.lk ("இலக்கு மின்னஞ்சல் முகவரி") அனுப்பப்படும். தொலைநகல் அறிவுறுத்தல்கள் தொடர்பில், அத்தகைய அனைத்து தொலைநகல் அறிவுறுத்தல்களும் "E" இன் கீழ் உள்ள தொலைநகல் பரிமாற்ற எண்ணிற்கு அல்லது HSL ஆல் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் மாற்று தொலைநகல் எண்ணிற்கு அனுப்பப்படும். நான்.:.நாங்கள் அத்தகைய தொலைநகல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க ஒப்புக்கொள்கிறோம். மேலும் மூல மின்னஞ்சல் முகவரியில் இருந்து உருவாக்கப்படும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் தொடர்பில் "இலக்கு மின்னஞ்சல் முகவரிக்கு" அனுப்பப்பட்டது எனக்கு.:.எங்களுக்கு HSL இனால் வழங்கப்பட்ட வசதியின் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தவிர்ப்பதற்காக, முறையான பாதுகாப்பு மற்றும் அணுகல் கட்டுப்பாட்டு முறைகள் இருப்பதை உறுதிசெய்ய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க நான்.:.நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ றோம்.

03. நான்/நாங்கள் இதன் மூலம்:

(a) நான்/நாங்கள் வழங்கிய அத்தகைய மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களின்படி செயற்பட அல்லது செயற்படாமல் இருப்பதில் HSL க்கு முழுமையான தற்றுணிபு (அதற்கான காரணங்களை வழங்குவதற்குக் கட்டுப்படாமல்) இருப்பதை உறுதிப்படுத்துகிறேன்/றோம். HSL அத்தகைய அறிவுறுத்தல்/கள் மீது செயற்படாதிருப்பதை தெரிவுசெய்தால், எனக்கு/எங்களுக்கு மின்னஞ்சல்/ தொலைபேசி/தொலைநகல் மூலம் விரைவில் நடைமுறைப்படுத்தக்கூடிய நேரத்தில் தெரிவிக்க முயற்சிக்கும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். HSL ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்னஞ்சல் / தொலைநகல் அறிவுறுத்தலின் படி செயற்படுவதற்கு அல்லது HSL ஆல் ஏற்றுக்கொள்ளப்படாத மின்னஞ்சல் /தொலைநகல் அறிவுறுத்தலின் மீது செயற்படாதிருப்பதற்கு HSL மீது எந்தப் பொறுப்பும் இல்லை என்பதை நான்/நாங்கள் உறுதிசெய்து ஒப்புக்கொள்கிறோம்.

(b) மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களின் உள்ளடக்கங்களுக்கு நான்/நாங்கள் கட்டுப்பட்டவர்ளாவோம் என்பதையும், அத்தகைய மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்கள் HSL ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அத்தகைய மின்னஞ்சல் /தொலைநகல் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், HSL ஒரு முழு வேலை நாளில் (அந்த நேரத்தில் இருக்கும் வரையறுத்த நேரங்களுக்கு உட்பட்டது) அதைச் செயற்படுத்தக் கடமைப்பட்டிருக்கும் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம். மின்னஞ்சல் அறிவுறுத்தல்களாயின் அது ”இலக்கு மின்னஞ்சல் முகவரியில்” இன்பாக்ஸிற்கு பிரவேசிக்கும் போதும் மற்றும் தொலைநகல் அறிவுறுத்தல்களாயின், HSL அத்தகைய தொலைநகல் வழிமுறைகளைப் பெறும்போதும் HSL க்கு கிடைக்கப்பெற்றதாக கருதப்படும் என்று எனக்கும்/எங்களுக்கும் HSL க்கும் இடையே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் இழப்பீட்டுக் கடிதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ”வேலை நாள்” என்ற சொல் இலங்கையில் பொது/வங்கி/ வணிக விடுமுறை அல்லாத ஒரு நாளை (சனி அல்லது ஞாயிறு தவிர) குறிக்கும்.

(c) ஒரு மூலக் கடிதம், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் HSL க்கு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில், முதலில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களே மேலோங்கி நிற்கும் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

(d) மின்னஞ்சல்/தொலைநகல் பரிமாற்றம் அல்லது அதன் எந்தப் பகுதியும் தெளிவாக இல்லை, தவறானது, பிழையானது, முரண்பாடான, முழுமையடையாத அல்லது தெளிவற்றதாக இருக்கும் பட்சத்தில், (ஆ) HSL வர்த்தக நேரம் முடிந்த பின்னர் அல்லது ஒரு வேலை நாளாகக் குறிக்கப்பட்ட ஒரு நாளில் ஒரு மின்னஞ்சல் /தொலைநகல் அறிவுறுத்தல் பெறப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது (இ) எதிர்பாராத சூழ்நிலைகள் அல்லது எந்தவொரு தகவல் தொடர்பு முறைமைகளின் தோல்வி, வேலைநிறுத்தங்கள், கலவரங்கள், மழை, வெள்ளம், புயல், போர், எதிரி நடவடிக்கை, தொற்றுநோய், ஊரடங்குச் சட்டம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய HSL இன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிபந்தனைகள் காரணமாக வரம்புகள் இல்லாமல் எந்த காரணத்திற்காகவும் ஏதேனும் மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தலின் அடிப்படையில் HSL செயற்பாட்டின் விளைவாக அல்லது செயற்பட முடியாமல் போனதன் விளைவாக, என்னால்.∵.எங்களால் ஏற்படும் இழப்புகள், செலவுகள், சேதங்கள், உரிமைகோரல்கள் மற்றும் செலவுகளுக்கு HSL, அதன் அதிகாரிகள் மற்றும் முகவர்களை நான்.∵.நாங்கள் பொறுப்பாக்க மாட்டோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

(e) இதில் உள்ள எங்கள் பொறுப்புகள் மற்றும் இழப்பீடுகள் மதிப்புமிக்கவை, திரும்பப்பெற முடியாதவை மற்றும் எந்த நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறோம், மேலும் எனது/எங்கள் வழியுரித்தாளர்கள், நிர்வாகிகள், பின்னுரிமையாளர்களை பிணைப்பதுடன் உரிமை மாற்றும், மேலும் இந்த அறிவுறுத்தல் கடிதம் மற்றும் இழப்பீட்டினை நிறைவேற்றுதல், வழங்குதல் மற்றும் செயலாற்றுகைக்கு அங்கீகாரமளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் என்னால்/எங்களால் எடுக்கப்பட்டுள்ளன.

(f) "மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களை அனுப்பும் வசதியை நான்/நாங்கள் தொடர்ந்து பெறும் வரை, இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் இழப்பீட்டு கடிதம் செல்லுபடியாகும் என்பதையும், நாங்கள் சேவையைப் பயன்படுத்துவதை நிறுத்தினாலும், மற்றும் எந்தவொரு மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களை செயற்படுத்துவது அல்லது செயற்படுத்தாதிருப்பது தொடர்பிலான, HSL இற்கு செய்யப்பட்ட கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் எப்படியானதாக இருந்தாலும் யாரால் செய்யப்பட்டதாக இருந்தாலும் இந்த ஒப்பந்தம் தொடர்ந்திருக்கும் என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்."

(g) “எனது/எங்கள் மின்னஞ்சல் முகவரியிலிருந்து நான்/நாங்கள் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களை HSL-ன் “இலக்கு மின்னஞ்சல் முகவரிக்கு” அனுப்பும்போது, மற்றும் HSL இந்த அறிவுறுத்தல்களைப் பதிவுசெய்தால், அது HSLக்கான எனது/எங்கள் அறிவுறுத்தல்களின் உறுதியான சான்றாகக் கருதப்படும் என்பதையும், தொலைநகல் அறிவுறுத்தல்களின் விடயத்தில், எனது/எங்கள் கையொப்பம்/களுடன் தொலைநகல் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கான HSL இன் பதிவுகள், இந்த அறிவுறுத்தல்கள் என்னிடமிருந்து/எங்களிடமிருந்து வந்தவை என்பதற்கான உறுதியான சான்றாக இருக்கும் என்பதை நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.”

(h) தொலைநகல்/மின்னஞ்சல் அறிவுறுத்தல்களின் செல்லுபடியாகும் தன்மை, உண்மைத்தன்மை அல்லது வேறுவிதமாகக் கண்டறிய HSL க்கு எந்தத் தேவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறோம். மூல மின்னஞ்சல் முகவரியிலிருந்து, எனது /எங்கள் பெயர் மற்றும்/அல்லது கையொப்பத்தில் அனுப்பப்படும் தொலைநகல் அறிவுறுத்தல்கள், அவை முறையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், HSL மூலம் பெறப்பட்ட தொலைநகல்/மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படுவதை நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

(i) அத்தகைய அறிவுறுத்தல்களை ஏற்று, உரிய நேரத்தில் HSL இன் பதிவுகளில் உள்ள எனது/எங்கள் முகவரி மற்றும்/அல்லது தொலைநகல் பரிவர்த்தனை இலக்கத்திற்கு எனக்கு/எங்களுக்கு எழுத்துமூல அறிவித்தலை 14 வேலை நாட்களுக்குள் வழங்குவதன் மூலம், எவ்வித பொறுப்பும் இல்லாமல், HSL இந்த வசதியை முடிவுறுத்தலாம் என்பதை உறுதிப்படுத்துகிறோம். என்னுடன்/எங்களுடன் மற்றும் /அல்லது எனது/அல்லது அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்களுடனான எந்தவொரு தகவல்தொடர்பாடல் நோக்கங்களுக்காகவும் கூறப்பட்ட முகவரி மற்றும் /அல்லது தொலைநகல் பரிவர்த்தனை இலக்கம் HSL ஆல் பயன்படுத்தப்படலாம்.

(j) நான்/நாங்கள் HSL க்கு 14 வேலை நாட்களுக்குள் எழுத்துமூலமான அறிவிப்பை வழங்குவதன் மூலமும், கீழே உள்ள அட்டவணையின் ”E” இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு மூல அறிவிப்பை வழங்குவதன் மூலமும் இந்த வசதியைப் பயன்படுத்துவதை முடிவுறுத்தலாம்.

மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களை வழங்கும் வசதியை HSL வழங்குவதைக் கருத்திற் கொண்டு, HSL, அதன் அதிகாரிகள் மற்றும் முகவர்களுக்கு, ஏதேனும் தீங்குகள், செலவுகள், இழப்புகள் அல்லது மற்றும் பிற தீங்கு, காயம், செலவுகள், இழப்புகள், பொறுப்புகள், சேதங்கள், கட்டணச் செயல்கள், சட்ட நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், செலவுகள் மற்றும் சட்டத்தரணி மற்றும் வாடிக்கையாளருக்கு இடையே வரம்பற்ற செலவுகள் உட்பட, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, HSL ஏதேனும் தொலைநகல்/மின்னஞ்சலுடன் இணங்குவதன் காரணமாக மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் (இந்த வசதியின் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிலிருந்து எழும் வரம்புகள் உட்பட) மற்றும்/அல்லது இந்த ஆவணம் மற்றும்.\.அல்லது HSL இன் கொள்கை மற்றும் நடைமுறைகள், அவ்வப்போது நிலவும், ஏதேனும் தொலைநகல்/மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் தொடர்பாக மற்றும்/அல்லது தொலைநகல்/மின்னஞ்சல் அறிவுறுத்தல்களில் இருந்து எழும் பரிவர்த்தனைகள் தொடர்பில் நான்/நாங்கள் இதன் மூலம் நிபந்தனையின்றி மற்றும் மாற்றமுடியாத விலக்குரிமையளிக்க ஒப்புக்கொள்கிறேன்.

இந்த அறிவுறுத்தல் கடிதம் மற்றும் இழப்பீடு இலங்கையின் சட்டங்களின்படி நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதுடன், இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக அதிகார வரம்பிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**மேலே உள்ள அட்டவணை குறிப்பிடுவது**

(தயவுசெய்து ஆங்கில பெரிய எழுத்துக்களை பயன்படுத்தவும்)

**A. வாடிக்கையாளரின் முழுப் பெயர்(கள்):**

…………………………………………………………….

……………………………………………………...…………………………………………………….

**முகவரி** …………………………………..…………………………………………………………..

………………………………………………..…………………..………………………………….

**வாடிக்கையாளர் குறியீடு**:……………………………………..………..………………………………

**வாடிக்கையாளர் கணக்கு இல.**………………………………..…………..…………………………...

**B.** **அறிவுறுத்தல்களைப் பெற விரும்பும் மார்க்கம்**

□ தொலைநகல் □ மின்னஞ்சல் □ இரண்டும்

**C.** **இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் இழப்புறுதிக் கடிதத்தின் கீழ் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகள்:**

- புதிய நிதிகள் முதலீடு
- திறைசேரி உண்டியல் மீள் முதலீடு/திறைசேரி முறி முதலீடுகள்
- திறைசேரி முறி கூப்பன் வருமானங்கள் முதலீடு
- முதிர்வுக்கு முந்திய ரெப்போ/ திறைசேரி உண்டியல்/திறைசேரி முறி முதலீடுகளின் உயர்வுகள்
- ரெப்போ/ திறைசேரி உண்டியல்/திறைசேரி முறி முதலீடுகள் / திறைசேரி முறி கூப்பன்கள் வருமானங்கள் முதிர்ச்சியின் போதான உயர்வுகள்.
- ரெப்போக்கள், திறைசேரி உண்டியல் / திறைசேரி முறிகள் இடையே நிதி பரிமாற்றங்கள்
- தொடர்பு எண்ணை மாற்றுதல்
- விண்ணப்பப் படிவத்திலோ அல்லது அடுத்தடுத்த தகவல்தொடர்பாடல்களிலோ கொடுக்கப்பட்ட நிலையான அறிவுறுத்தல்களில் மாற்றங்கள்
- திறைசேரி உண்டியல் / திறைசேரி முறி ஏலங்களில் விலைமனுக்கோரல்

**D.** **வாடிக்கையாளர் (மூல மின்னஞ்சல் முகவரி) மின்னஞ்சல்:** 1……………..……………………
**(தயவுசெய்து தெளிவாக எழுதவும்)** 2.…………………………………
3.…………………………………
4.…………………………………
5.…………………………………

**E.** **HSL முகவரி:** HNB செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
4வது மாடி, 53, தர்மபால மாவத்தை
கொழும்பு 03
இலங்கை

**கவனத்திற்காக குறிக்கப்பட்டது:** VP – செயற்படுத்தல்கள்

**தொலைநகல் பரிமாற்ற எண்:** 94 11 2 206290

கையொப்பமிடப்பட்டது:

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்கள்

பெயர் ......................................................... **கையொப்பம்**
...................................................

பெயர் ......................................................... **கையொப்பம்**
...................................................

சாட்சி .......................................... **(பெயர்)** .......................................

சாட்சி .......................................... **(பெயர்)** .......................................

**திகதி:** ..........................................

**நிறுவனத்தின் பொதுவான இலச்சினை/இறப்பர் முத்திரை**

***அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்களின் பட்டியலையும், மின்னஞ்சல் முகவரியைத் உருவாக்குவதற்குமான சபை தீர்மானத்தை இணைக்கவும்**